**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 725/2020 |
| நாள் | 18.08.2025 |
| பி.சா.1 | ராஜசெல்வகுமார் |
| வயது | 40 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.த.சா.ஆ–3 சட்ட அறிவிப்பு கிடைத்த பின்பு வாதியின் கணவரை அனுகி நான் பார்த்ததாகவும், அவர் தவறுதலாக எனக்கு அனுப்பிவிட்டதாக கூறியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ–3 சட்ட அறிவிப்பில் உள்ள சங்கதிகள் உண்மை என்பதால் தான் நான் பதில் சட்ட அறிவிப்பு எதுவும் வாதிக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கரூர் டவுன் எண். 77 எல்.ஜி.பி நகரில் ராசா ஆர்.டிரேடர்ஸ் என்ற பெயரில் கைத்தறி தொழில் செய்து வருவதற்கு பதிவு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. நான் கடந்த 14 ஆண்டுகளாக மேற்படி தொழிலை செய்து வருகிறேன். மேற்படிநிறுவனத்திற்கு கணக்கு வழக்குகளை நான் பராமரித்து வருகீறேன். நான் வாதியின் கணவர் ஏ.ஆர்.சி கார்மெண்ட்ஸ் நிறுவனத்திற்கு கைத்தறி ரகங்களை விற்றதாகவும், அதற்கு கொடுக்கவேண்டிய பணத்திற்கு வாதியின் கணவர், தனது மனைவி உமா என்பவரின் கணக்கு மூலமாக அந்த பணத்தை திருப்பி கொடுத்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனக்கும், வாதியின் கணவருக்கு இடையே ஏற்பட்ட வரவு செலவிற்கு தாவா நடவடிக்கைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கரூர் பேங்க் ஆப் பரோடா வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கியின் முந்தைய பெயர் விஜயா பேங்க். மேற்படி விஜயா வங்கி வாதியின் கணவருக்கும் வங்கி கணக்கு

இருந்தது என்றால் சரிதான். வாதியின் கணவருக்கு கரூர் இந்தியன் வங்கியிலும் ஏ.ஆர்.சி கார்மெண்ட்ஸ் என்ற பெயரில் வங்கி கணக்கு இருந்தது என்றால் சரிதான். எனக்கும், வாதியின் கணவருக்கும் இடையே நடைபெற்ற வரவு செலவு கணக்குகள் அனைத்தும் வங்கி கணக்கு மூலமாக தான் நடைபெறும் என்றால் சரிதான். இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள வரவு செலவிற்கும் எனக்கும் வாதியின் கணவருக்கும் உண்டான வரவு செலவிற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் தான் என்னுடைய வரவு செலவு கணக்குகள் எதையும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் உள்ள தொகைகளுக்கு நான் வவுச்சரோ அல்லது ரசீதோ வாதிக்கோ, வாதியின் கணவருக்கோ கொடுத்தேனா என்றால் இல்லை. அதேபோல் வாதி மற்றும் அவரது கணவரிடம் நான் வவுச்சரோ அல்லது ரசீதோ பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். உள்ளூர் வரவு செலவு என்பதால் அவ்வாறு நான் பெற்றுக்கொள்ளவில்லை. உள்ளூர் வரவு செலவு என்பதால் வவுச்சரோ அல்லது ரசீதோ வாங்குவதோ, கொடுப்பதோ இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தாவா கடன் தொகையை என்னுடைய கணக்கில் எவ்வாறு வரவு வைத்துள்ளேன் என்று சொன்னால் நான் பொருட்களை சப்ளை செய்ததற்கு, தொகை வந்ததாக காண்பித்துள்ளேன். எனக்கும், வாதியின் கணவருக்கும் இடையே நடைபெற்ற வரவு செலவு கணக்குகளில் தாவாக்கு உண்டான தொகையை நான் காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 வழக்குரையில் காண்பித்துள்ள பிரதிவாதி பி.வெங்கடேஷ் என்பவரை கடந்த 15 ஆண்டுகளாக எனக்கு தெரியும். மேற்படி வெங்கடேஷ் என்பவர் எஸ்.ஜி.வி.டெக்ஸ்டைல் வேலை பார்த்து வருகிறார். வெங்கடேஷ் என்பவர் கரூர் ஏ.எம்.கே Handloom என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த நிறுவனம் மூடப்பட்டு 10 வருடங்களாகிறது. நான் குறிப்பிடும் எஸ்.ஜி.வி.டெக்ஸ்டைல் நிறுவனத்தின் உரிமையாளர் கோயம்புத்தூர் சென்னியம்பாளையத்தை சேர்ந்த முத்துசாமி மகன் பழனிவேல் என்பவரை எனக்கு தெரியும். மேற்படி வெங்கடேசன் என்பவர்

என்னுடன் ஒவ்வொரு வாய்தாவுக்கும் வருவார். இன்று வரவில்லை. வெங்கடேஷ் என்பவர் மீது வாதியின் கணவர் தாக்கல் செய்த பி.த.சா.ஆ.1 வழக்கிற்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் குடும்ப நண்பர் என்றால் சரியல்ல. வியாபார ரீதியில் தான் வாதியுடன் பழக்கம் இருந்தது. நான் கடந்த 03.06.2017 ம் தேதியன்று வாதியிடம் இருந்து ரூ. 1,90,000 மும், கடந்த 07.06.2017 ம் தேதியன்று ரூ. 1,80,000 வாதியிடம் இருந்து காசோலை மூலமாக கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. அதற்கு 18 சதவீத வட்டி தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாதியிடம் கடன் தொகையை பெற்றுக்கொண்டு, கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணைஇல்லை.</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.